SRI LANKA

# இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்

## மட்டம் I பரீட்சை – ஜூலை 2021

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

# (103) பொருளியல் (ECN)

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்**
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669

கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு

**இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர்கள் கழகம்**

**மட்டம் I பரீட்சை – ஜீலை 2021**

# (103) பொருளியல்

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**(மொத்தம் 40 புள்ளிகள்)** **பகுதி- A**

***வினா 01 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

**1.1** (2)

**1.2** (3)

**1.3** (1)

**1.4** (4)

**1.5** (4)

**1.6** (1)

**1.7** (4)

**1.8** (1)

**1.9** (3)

**1.10** (2)

**1.11** மாறாதிருக்கின்றது

**1.12** பொருளாதார

**1.13** தவறு

**1.14** சரி

**1.15 கேள்வியை தீர்மானிக்கும் காரணிகள்**

1 குறித்த பண்டத்தின் விலை

2 தொடர்புபட்ட பண்டத்தின் விலை

3 நுகர்வோன் வருமானம்

4 நுகர்வோனின் சுவை மற்றும் தேவைப்பாட்டின் மாற்றம்

5 எதிர்கால எதிர்பார்ப்புகள்

6 சந்தையிலுள்ள கொள்வனவாளர்கள் மற்றும் அதன் தொகுப்பும்

**1.16 விலைக்கும் கேள்வி கணியத்திற்கும் இடையிலான எதிர்மறை தொடர்புக்கான காரணங்கள்**

1 பதீலீட்டு பண்டத்தின் தாக்கம்

2 வருமானத்தின் தாக்கம்

**1.17 நிரம்பலின் விலை நெகிழ்ச்சியை தீர்மானிக்கும் காரணிகள்**

1 உற்பத்தி காரணிகளின் நகரும் தன்மை

2 பண்டத்தின் தன்மை

3 பங்குகளையும் இருப்புகளையும் கையாளும் திறமை

4 குறித்த பண்டத்தின் விலை மற்றும் நிரம்பல் மாற்றம்

5 உற்பத்தி காரணிகள்

6 சேமிப்பகத்தின் இடவசதி

**1.18 அளவு திட்ட விளைவு விதியின் வகைகள்**

1 அதிகரித்து செல்லும் அளவுதிட்ட விளைவு விதி

2 குறைந்து செல்லும் அளவுதிட்ட விளைவு விதி

3 மாறா அளவுதிட்ட விளைவு விதி

aat SRI LANKA

**1.19 பொருளாதார இலாபம் மற்றும் கணக்கியல் இலாபம் இடையிலான வேறுபாடு**

கணக்கியல் இலாபமானது மொத்த வருமானத்தில் மொத்த செலவினை கழிக்க வருவது ஆகும். மொத்த வருமானத்திலிருந்து பொருளாதார செலவுகளை கழிக்க வருவது பொருளியல் இலாபம் ஆகும். அதாவது மறைமுக செலவுகள் கணக்கீட்டு இலாபத்தில் கழிக்கப்பட மாட்டாது கணக்கீட்டு இலாபத்தில் நேரடி செலவுகள் மட்டும் கருத்தில் கொள்ளப்படும். அத்துடன் பொருளியல் இலாபத்தில நேரடி மற்றும் மறைமுக செலவுகளும் கருத்திற் கொள்ளப்படும்.

**கணக்கீட்டு இலாபம் = மொத்த வருமானம் - நேரடி செலவுகள்**

**பொருளியல் இலாபம் = மொத்த வருமானம் - (நேரடி செலவுகள் + மறைமுக செலவுகள்)**

**1.20 குறுங்கால உற்பத்தி நடைமுறை**

குறுங்காலம் உற்பத்தி நடைமுறை என்பது பொருட்கள் மற்றும் சேவைகள் உற்பத்தி நடைமுறையின் போது உற்பத்தி செயற்பாட்டில் உள்ளீடாக நிலையான காரணிகள் மாறும் காரணிகள் பயன்படுத்தப்படுகின்றன. இங்கு உற்பத்தி கால அளவின் போது நிலையான காரணிகளை மாற்றிக் கொள்ள முடியாமல் காணப்படும். குறுங்காலத்தின் உற்பத்தியானது நிலையான மற்றும் மாறும் உற்பத்தி காரணிகளை உள்ளடக்கியவையாகவும், மொத்த கிரயமானது நிலையான கிரயம் மற்றும் மாறும் கிரயம் என்பனவற்றினை உள்ளடக்கியும் காணப்படும். குறுங்காலத்தில் ஆகக் குறைந்தது ஒரு காரணி உள்ளீட்டினையாவது மாற்றிக் கொள்ள முடியாத காலம் ஆகும். குறுங்காலத்தில் செலவு மற்றும் உற்பத்தி நடத்தையானது குறைந்து செல்லும் எல்லை விளைவு விதியின் செயற்பாட்டினை அடிப்படையினை கொண்டதாக அமையும்.

SRI LANKA

குறுங்காலத்தில் ஆகக் குறைந்தது ஒரு நிலையான காரணியாவது காணப்படும். குறுங்காலத்தில் உற்பத்தியை அதிகரிக்க விரும்பினால் மாறும் காரணிகளை அதிகரிப்பதன் மூலமே உற்பத்தியான் அதனை மேற்கொள்ள முடியும்

***(02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)***

***பகுதி A முற்றும்***

## *வினா 02 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 01- வணிக சூழல் தொடர்பான பொருளாதார கருத்துக்கள் மற்றும் அமைப்புக்கள்***

**(a) கலப்பு பொருளாதாரத்தின் பண்புகள்**

- அடிப்படை பொருளாதார பிரச்சனைகள் யாவும் விலை பொறிமுறை மற்றும் கட்டளை பொறிமுறை ஆகிய இரண்டின் ஊடாகவும் மேற்கொள்ளப்படல்.
- வளங்களின் உரிமை சொத்துக்களின் உடைமை என்பன அரசாங்கம் மற்றும் தனியார் துறை ஆகிய இரு துறையினரிடமும் காணப்படும்
- தொழில்வாய்ப்பு உருவாக்கத்தில் தனியார்துறை அரசு துறை இரண்டும் பங்களிப்பு செய்யும்
- நுகர்வு நடவடிக்கையிலும் தனியார்துறை அரசு துறை இரண்டும் பங்களிப்பு செய்யும்
- தனியார் இலாப நோக்கத்திலும் அரசு சமூக நலனை அடிப்படையாக கொண்டும் சேவை நோக்கத்தின் அடிப்படையில் செயற்படல்

*(03 புள்ளிகள்)*

**(b)** அடிப்படை பொருளாதார பிரச்சனைகளை வேறுபட்ட பொருளாதார முறைமையின் கீழ் விலைபொறிமுறையின் அடிப்படையில் தீர்வு காணுதல்

**1. எதனை? எந்தளவு உற்பத்தி செய்தல் வேண்டும் ?**

எதனை உற்பத்தி செய்தல் என்பது பொருளாதாரத்தில் வரையறுக்கப்பட்ட வளங்களை கொண்டு எந்த பொருளை எந்த அளவு உற்பத்தி செய்வது பற்றிய கேள்வியாகும். இங்கு மாற்று பயன்பாடுடைய வளங்களை எவ்வாறு ஒதுக்குவது பற்றியதே முதலாவது பிரச்சினையாகும். இது எல்லா பொருளாதார முறைமைகளுக்கும் பொதுவாக காணப்படுகின்ற ஒரு பிரச்சினையாக கருதப்படுகின்றது.

இந்த பிரச்சினை விலைபொறிமுறையின் கீழ் பண்டத்தின் விலை மற்றும் அதன் கேள்வியின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது. தனியார் துறையானது விலையுயர்வான பண்டத்தினை அதிளவு உற்பத்தியும் விலை குறைவான பண்டத்தினை குறைவான உற்பத்தியும் செய்யப்படுகின்றது. இதன்அடிப்படையாக கொண்டு சந்தை பொருளாதாரமானது பொறிமுறையானது அதிகளவில் இலாபம் ஈட்டக்கூடிய பொருட்களையே உற்பத்தி செய்கின்றது.

**2. எவ்வாறு உற்பத்தி செய்தல் வேண்டும் ?**

அதாவது தெரிவின் அடிப்படையில் பொருட்கள் மற்றும் சேவையை உற்பத்தி செய்வதற்கு குறிப்பிட்ட நுட்பமானது பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன் பொருட்ள் மற்றும் சேவையை உற்பத்தி செய்வதற்கு வேறுபட்ட காரணி சேர்கைகளும் மற்றும் வேறுபட்ட நுட்பங்களும் பயன்படுத்தப்படுகின்றன. இது எல்லா பொருளாதாரத்துக்கும் பொதுவான ஒன்றாகும்.

இந்த பிரச்சனையானது விலை பொறிமுறையின் கீழ் காரணிகளின் விலை மற்றும் உயர்வான இலாபத்தினை ஈட்டிக்கொடுக்க கூடிய குறைந்த கிரயத்தினை உடைய தொழில்நுட்ப முறைகளை பயன்படுத்துவதன் மூலம் தீர்க்கப்படுகின்றது. தனியார் துறையானது அதிகளவு இலாபத்தினை ஈட்டிக்கொள்ளக்கூடிய மற்றும் குறைந்த கிரயத்தையுடைய மற்றும் குறைந்த கிரயத்தையுடைய உற்பத்திக் காரணிகளையே தெரிவு செய்கின்றது.

**3. யாருக்காக உற்பத்தி செய்தல்?**

யாருக்காக உற்பத்தி செய்யப்படுகின்றது என்பது தனியாரின் வருமான பங்கீட்டிடு மற்றும் காரணி வருமானங்கள் மற்றும் காரணி விலைகளின் அடிப்படையில் பார்க்கப்படுகின்றது. அத்துடன் வளங்களின் அருமைப்பாடு ஆனது சமூகத்தில் காணப்படும் எல்லா மனிதரின் தேவைக்கேற்ப உற்பத்தி செய்வதற்கு தடையாக காணப்படுகின்றது. இது எல்லா பொருளாதர முறையில் காணப்படும் ஒரு பொது பிரச்சனையாகும்.

இதனை விலைபொறிமுறையடிப்படையில் பொருட்கள் மற்றும் சேவைகளின் கேள்வியின் அடிப்படையிலும் அதாவது நுகர்வோரின் பொருட்கள் சேவைகளுக்ான கேள்வியானது அவர்களின் நுகர்விற்கான வருமானத்தின் அளவினை பொறுத்து தீர்மானிக்கப்படுகின்றது. ஆனால் தனியார் துறையானது வருமானம் கூடிய மக்களின் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான கேள்வி மற்றும் அதிகூடிய இலாபத்திலே தங்கியுள்ளது.

*(04 புள்ளிகள்)*

**(c) மனிதனின் தேவைகள் மற்றும் விருப்பங்கள்**

மனிதன் தனது வாழ்கை வாழ்வதற்காக உடல் ரீதியான தேவைப்பாடுகள் மற்றும் மனரீதியான தேவைப்பாடுகள் போன்றவற்றை பூர்த்தி செய்தல் வேண்டும். மனதின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான விருப்பங்கள் வேறுபட்டனவாக காணப்படும்.

aat SRI LANKA

உதாரணம்:-

| தேவைகள் | விருப்பங்கள் |
|---|---|
| உணவு | பாண், சோறு, கறிகள், இடியப்பம் |
| உடைகள் | சட்டைகள் காற்சட்டைகள் சேலைகள் மற்றும் சட்டைகள் போன்றன |

*(03 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

***வினா 03 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***

| ***அத்தியாயம் 02 - கேள்வி நிரம்பல் சந்தை சமநிலை மற்றும் அரசு தலையீடுகள்*** |
|---|

**(a)** Qd = 16,600 -3P

Qs = -6,000 + 2P

Qd = Qs சந்தை சமநிலையில்

16,600 -3P = -6,000 +2p

22,600 = 5P

22,600/5 = P

4520 = P

சந்தை சமநிலையில் விலை = ரூபா.4,520/-

P = 4,520 யினை Qd யில் பதிலீடு செய்தல்

Qd = 16,600 -3P

Qd = 16,600 -3x 4,520)

Qd = 16,600-13,560


Qd = 3,040

சந்தை சமநிலையில் தொகை = 3,040 அலகுகள்

***(04 புள்ளிகள்)***

**(b) உயர்ந்த பட்ச விலை**

இது அரசினால் விதிக்கப்படும் சட்டரீதியான விலையாகும். இவ்விலையானது குறித்த பண்டம் அல்லது சேவையின் சந்தை சமநிலை விலையினை விட குறைவாகவே காணப்படும். மேலும் இவ் விலையானது நுகர்வோனுக்கு பயன்தரும் விலையாக காணப்படும். சந்தையில் காணப்படும் உச்ச விலை காணப்படும் போது அதனை விட உயர்ந்த விலைக்கு பொருட்களை விற்பனை செய்யும் போது கறுப்புச்சந்தை உருவாகின்றது.




| |
|---|
| Price – விலை<br><br>Quantity – தொகை<br><br>Black Mkt Price- கருப்புச்சந்தை விலை<br><br>Maximum Legal Price – உயர்ந்த பட்ச கட்டுபாட்டு விலை |

அரசு நுகர்வோனை பாதுகாக்கும் நோக்கம் கருதி உயர்ந்தபட்ச விலையை நிர்ணயிக்கின்றது. அத்துடன் மேற்காட்டிய வரைபடத்தில் உயர்ந்த பட்ச விலையானது P2 ஆக காணப்பட்டால் நுகரவோனால் நுகரப்படும் தொகையானது Q2 மற்றும் நிரம்பல்தாரர் ஆல் உற்பத்தி செய்ய கூடிய தொகையானது Q3. இது மிகை கேள்வியையும் மற்றும் சந்தையில் பற்றாக்குறை நிரம்பலும் ஏற்படும்.

**உயர்ந்தபட்ச விலையினை விதிக்கும் போது ஏற்படும் விளைவுகள்**

- குறித்த பண்டத்திற்கான கேள்வி அதிகரிப்பதோடு மற்றும் பண்டத்திற்கான நிரம்பல் குறைவடையும் இது சந்தையில் மிகைக் கேள்வியினை உருவாக்கும்.
- இங்கு மிகைக் கேள்வியை இல்லாதொழிக்க சரியான அளவீடுகள் எடுப்பதற்கு தவறும் போது சந்தை விலையானது உயரும் போது நுகர்வோன் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடும்.
- கேள்விக்கு ஏற்ப நிரம்பல் சந்தையில் காணப்படாமல் பற்றாக்குறை நிலை நிலவுவதால் கறுப்புச்சந்தை மற்றும் கறுப்புச்சந்தை விலை நிலைமை ஏற்படும்
- நுகர்வாளன் மிகை மற்றும் நுகர்வாளன் நலன் குறைவடைந்து செல்லும்
- அரசு மிகை கேள்வியை குறைப்பதற்கு பின்வரும் கொள்கைகளை கையாளுகின்றன.
    - ➢ கோட்டா முறையை அமுல்படுத்துதல்
    - ➢ பதிலீட்டு பண்டங்களின் சந்தை முறைமை
    - ➢ மிகை கேள்வியினை இறக்குமதி செய்தல்
    - ➢ நிறுவனங்களுக்கு அவர்களது உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தல்
- விலைக்கொள்கையை அமுல்படுத்துவதால் அரசாங்க செலவீனங்கள் அதிகரித்தல்
- உற்பத்தியாளன் அதிகூடிய விலையில் விற்பனை நடவடிக்கையில் ஈடுபடுவதால் மிகைக் கேள்வி நிலை ஏற்படும்.

*(06 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

## *வினா 04 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்*

***அத்தியாயம் 03 - உற்பத்தி நடைமுறைகளின் நடாத்தை மற்றும் வேறுபட்ட சந்தை முறைமைகள்***

**(a) நிறைபோட்டி சந்தையின் பண்புகள்**

1. ஏராளமான வழங்குனர்களும், விற்பனையாளர்களும் காணப்படுவர்.
2. நிறுவனங்கள் ஓரே தன்மையான பொருட்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்தலும் வழங்குதல் செய்தலும் காணப்படும்
3. சந்தைக்கு உட்பிரவேசித்தல் தடைகள் காணப்படாது.
4. நிறுவனங்களுக்கு சந்தைக்கு உட்பிரவேசித்தல் தடைகள் காணப்படாமையினால். நிறுவனமானது நீண்ட காலத்தில் சாதாரண இலாபத்தினையே உழைக்கும். (பூச்சிய இலாபம்)

5. நிறைபோட்டி சந்தை நிறுவனங்களின் எல்லை வருமானமானது சராசரி வருமானத்திற்கு சமனானதாக காணப்படும்.
6. நிறைபோட்டி சந்தை நிறுவனங்கள் விலையை ஏற்கும் நிறுவனங்களாக காணப்படும்.
7. சந்தை பற்றிய பூரண அறிவு காணப்படும்
8. நிறைபோட்டி சந்தையிலுள்ள எல்லா நிறுவனங்களுக்கிடையில் உற்பத்தி காரணிகள் நகருவதற்கு எந்தவித தடைகளும் செலவுகளும் காணப்படமாட்டாது மற்றும் உற்பத்தி காரணிகள் சுதந்திரமாக நகரும்.

*(04 புள்ளிகள்)*

***அத்தியாயம் 05 - நிதியில் முறைமை , பணம் மற்றும் பொதுவிலைமட்டம்***

**(b) பணவீக்கத்தால் ஏற்படும் விளைவுகள்**

**1. பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை அதிகரிப்பு**

பணவீக்கத்தால் நாட்டின் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலையில் அதிகரிப்பு எற்படுவது முக்கியமானதொன்றாக காணப்படும். இது முக்கியமாக குறைந்த வருவாயுடைய குடும்பங்களின் மெய்வருமானத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தும். இவ்வாறு மெய்வருமானம் குறைவடைவதால் மக்களின் கொள்வனவு சத்தி வீழ்ச்சியடையும். (இங்கு நிலைத்த வருமானம் பெறுவோர் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோர் பற்றி கூறப்படுகின்றது)

**2. பொருளாதார வீழ்ச்சியடையும்**

பொருளாதார வளர்ச்சியானது தொடர்ச்சியான மொத்த உள்நாட்டு மெய் உற்பத்தியின் அதிகரிப்பில் தங்கியுள்ளது. நாட்டில் பணவீக்கம் ஏற்படுமாயின் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது வீழ்ச்சியடைவதால் பொருளாதாரமானது பொருளாதார வளர்ச்சியினை எய்த முடியாது. மேலும் இது பொருளாதார வளர்ச்சியினை இழிவு நிலைக்கு கொண்டு செல்லும்.

**3. சென்மதி நிலுவை கொடுப்பனவில் பாதகமான நிலை காணப்படல்**

நாட்டிற்குள் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலையுயர்வு காரணமாக உள்நாட்டில் உற்பத்தியினை நிறுத்திவிட்டு மக்கள் மற்றும் நிறுவனங்கள் அவ்பொருட்கள் மற்றும் சேவைகளை இறக்குமதி செய்வது இலாபகரமான செயலாக காணப்படுவதால் இறக்குமதி நடவடிக்கையில் ஈடுபடுகின்றமையால் சென்மதி நிலுவை கொடுப்பனவு கணக்கானது அதிகரித்து பாதகமான நிலைக்கு தள்ளப்படும்

**4. கடன் வாங்குதல் அதிகரித்தல்**

பணவீக்கமானது மக்கள் மற்றும் நிறுவனங்கள் மீதான கடன் செலவுகளை அதிகரிக்கும்.

**5. கூலிகளும் சம்பளக் கொடுப்பனவுகளும் அதிகரித்தல்**

அதிகளவிளான பணவீக்கம் ஊழியர்களின் சம்பளத்தினை அதிகரிப்பதுடன் அவர்களின் மெய்வருமானத்தின் வீழ்ச்சிக்கான பெறுமானத்தை கேட்கின்றனர். இதனால் ஒரு அலகிற்கான தொழிலாளர் கூலித் தொகை அதிகரிப்பதுடனும் குறைந்த இலாபத்தினை நிறுவனம்

aat SRI LANKA

எய்துகின்றன. இதனால் தொழிலாளர்கள் மற்றும் சங்கங்களும் சம்பளத்தினை உயர்த்துமாறு கோரிக்கை விடுக்கின்றனர். அதனால் தொழில் நிலைமைகளில் பாதிப்பு ஏற்படும்.

**6. நிறுவனத்தின் போட்டி திறனில் வீழ்ச்சி**

ஏனைய நாடுகளை விட அதிகளவிலான பணவீக்க நிலை காணப்படுமாயின் இவ் நிலமையானது ஏற்றுமதியினை விடவும் குறைந்த விலை போட்டி திறனை உரக சந்தையில் ஏற்படுத்தும்.

**7. இலங்கை மக்ககளின் வாழ்க்கை தரத்தின் வீழ்ச்சி**

பணவீக்கத்தின் காரணமாக குறித்த பண்டம் மற்றும் சேவைகளின் விலை உயர்வானது மக்களின் மெய்வருமானத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தும். இதன் காரணமாக மக்களின் வாழ்க்கை தரம் இழிவு நிலைக்கு தள்ளப்படும்.

**8. வேலையின்மை நிலை அதிகரித்தல்**

நாட்டின் உற்பத்தியின் வீழ்ச்சியானது ஊழியர் வேலைவாய்பு நிலையை வீழ்ச்சியடைய செய்யும் மற்றும் பொருளாதாரத்தில் வேலையின்மை வீதம் அதிகரிக்கும்.

**9. நிறுவனங்களின் உற்பத்தி கிரயம் அதிகரிக்கும்**

பணவீக்கத்தின் காரணமாக மூலப்பொருள் கிரயம் அதிகரிப்பதுடன் தொடர்புடைய ஏனைய கிரயமும் அதிகரிகின்றன இதனால் உற்பத்தி நடைமுறை கிரயமும் அதிகரிக்கின்றது. இதனால் இலாபம் குறைவடைகின்றது.

**10. முதலீடுகள் மற்றும் சேமிப்புகளில் ஏற்படும் வீழ்ச்சி**

மக்கள் பொருட்கள் மற்றும் சேவைகள் மீது அதிகளவில் செலவு செய்கின்றனர் . ஆகையால் பணவீக்கத்தின் காரணமாக பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை அதிகரிப்பதன் மூலம் சேமிப்பு குறைவடைகின்றது. முதலீடானது பொருளாதார அபிவிருத்தியில் முக்கிய காரணியாகும். அதனால் பொருளாதர அபிவிருத்தியானது வீழ்ச்சியை நோக்கி செல்லும்.

*(06 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

## வினா 05 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

***அத்தியாயம் - 06 சர்வதேச வியாபாரம் மற்றும் நாணயமாற்று வீதம்.***

**(a)**

1. ஒதுக்கீடுகள் : நாட்டிற்குள் பொருள் இறக்குமதி அனுமதி தொடர்பான ஒரு பௌதீக வரையறை ஆகும்.
2. நாணயமாற்று கட்டுப்பாடு
3. ஓரே மாதிரியான பதிலீட்டு பொருட்கள் உற்பத்தியாளர்கள்.
4. பொருளாதாரத்தின் அறிமுக தடைகள்
5. ஏற்றுமதி மீதான தன்னிச்சையான வரம்புகள்ள

*(02 புள்ளிகள்)*



aat SRI LANKA

**(b)**

(i)

- நாடு X அரிசி உற்பத்தியில் மிகச்சிறந்தது
- நாடு Y கோதுமை உற்பத்தியில் மிகச்சிறந்தது

***(02 புள்ளிகள்)***

(ii)

| | **அரிசியின் அமையச்செலவு** | **கோதுமையின் அமையச்செலவு** |
|---|---|---|
| **X** | $2/8 = 0.25$ (1அரிசி = 0.25 கோதுமை) | $8/2 = 4$ (1 கோதுமை =1அரிசி) |
| **Y** | $4/4 = 1$ (1அரிசி = 1 கோதுமை) | $4/4 = 1$ (1 கோதுமை = 1அரிசி) |

நாடு X ஆனது அரிசி உற்பத்தி செய்வதில் ஈடுபடுவது ஒப்பீட்டளவில் அனுகூலமானது. மற்றும்

நாடு Y ஆனது கோதுமை உற்பத்தி செய்வதில் ஈடுபடுவது ஒப்பீட்டளவில் அனுகூலமானது. ஒப்பீட்டளவில் பார்த்தால் இருநாடுகளும் இரு பொருட்களை உற்பத்தி செய்வதில் குறைந்த அமையச்செலவினையே கொண்டிருக்கும்.

***(04 புள்ளிகள்)***

**(c)**

**நடைமுறை கணக்கின் இணை கணக்குகள்**

1. வர்த்தக கணக்கு ( ஏற்றுமதி மற்றும் இறக்குமதி பொருட்கள்)
2. சேவைகள் கணக்கு ( ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சேவைகள்)
3. முதல்தர வருமானக் கணக்கு
4. இரண்டாம் தர வருமானக் கணக்கு

***(02 புள்ளிகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

*பகுதி **B** முற்றும்.*

aat SRI LANKA

## *வினா 06 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 4 - தேசிய கணக்கீடு மற்றும் அரசின் பங்கீடும்***

**(A)**

**(a)**

அரசாங்கத்தினால் தற்போதைய பொருளாதார நடவடிக்கைகளுக்கான செய்யப்படும் செலவீனங்கள் ஆகும். அதாவது அரசாங்க சேவைகளையே மீண்டெழும் செலவாக கருதப்படுகின்றது. இவ் செலவீனங்கள் மூன்று வகைப்படும்

- பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான மீண்டெழும் செலவுகள்
- வட்டிக் கொடுப்பனவுகள்
- மீண்டெழும் மானியங்கள் மற்றும் மாற்றல்கள்

மூலதன செலவீனங்கள்

ஒரு வருடத்திற்கு மேலே பயன்தரும் ஆயுட்காலத்தினை கொண்ட கணிசமான செலவினை ஏற்படுத்தும் நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக செய்யப்படும் செலவுகள் ஆகும். இவை இரு வகைப்படும்

- மூலதன மாற்றல்கள்
- மெய்சொத்துகளின் கொள்வனவு

*(03 புள்ளிகள்)*

**(b) நேரடி வரிகள்**

அதாவது வரிச்சுமையானது மூன்றாம் நபருக்கு மாற்றப்படும் வரிகளை நேரடி வரிகள் என குறிக்கப்படுகின்றன. இந்த வரிகள் நுகர்வோன் செய்யும் செலவீனங்கள் மீது திணிக்கப்படுகின்றன.

உதாரணம் : பெறுமதி சேர் வரிகள் மற்றும் இறக்குமதி வரிகள்

*(02 புள்ளிகள்)*

**(B)(a)**

**(i) மொத்த பெறுமதி சேர்த்தல் - அடிப்படை விலையில்**

| | |
|---|---|
| ஊழியர்களுக்கான இழப்பீடு | 7,500 |
| மொத்த தொழிற்பாட்டு மிகை | 13,600 |
| கலப்பு வருமானம் | 1,200 |
| உற்பத்தி மீதான மானியங்கள் கழித்த ஏனைய வரிகள் | 150 |
| **மொத்த பெறுமதி சேர்த்தல் - அடிப்படை விலையில்** | **22,450** |

*(05 புள்ளிகள்)*

**(ii) மொத்த உள்நாட்டு உற்பத்தி – சந்தை விலையில்**

| | |
|---|---|
| மொத்த பெறுமதி சேர்த்தல் - அடிப்படை விலையில் | 22,450 |
| உற்பத்தி மற்றும் இறக்குமதி மீதான நிகர வரி | 2,000 |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி – சந்தை விலையில்** | 24,450 |

***(02 புள்ளிகள்)***

**(iii) மொத்த உள்நாட்டு வருமானம்**

| | |
|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்தி – சந்தை விலையில் | 24,450 |
| நிகர வெளிநாட்டு முதன்மை வருமானம் | (1,400) |
| **மொத்த உள்நாட்டு வருமானம்** | **23,050** |

***(02 புள்ளிகள்)***

**(b) தேசிய கணக்குகளை தயாரிப்பதன் முக்கியத்துவம்**

- பொருளாதார செயல்திறனை மதிப்பீடு செய்வதற்கு
- உலகின் பிறநாடுகளுடன் ஒப்பீடு செய்வதற்கு
- பொருளாதார வளர்ச்சியை அளவிடுதல்
- நாட்டின் பொருளாதார கட்டமைப்பினை புரிந்து கொள்ளல்
- தலா தேசிய வருமானத்தை மதிப்பீடு செய்யவதற்கு
- வளக்கட்டுப்பாடு மற்றும் பயன்பாட்டிற்கான வெளிப்பாடு பற்றிய புரிதலை ஏற்படுத்துவதற்கு
- பேரின பொருளாதார மாறிகளின் நடத்தையினை அறிவதற்கு
- பொருளாதார காரணிகளுக்கு இடையிலான செயல்பாட்டு உறவுகளை அடையாளம் காணல்.

***(04 புள்ளிகள்)***

**(c) நிதிக் கொள்கை**

இவ் கொள்கையானது அரசாங்கத்தின் செலவீனங்கள் , வரிகள் பெற்றுக்கொண்ட கடன்கள், போன்றவற்றின தொடர்பிலான அரசாங்கம் பொருளாதார நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக செய்த செலவீனங்கள் மற்றும் ஈட்டிக்கொண்ட வருமானங்ளை அளவீடு செய்யும் முறையாகும். இது சுருங்கிய நிதிக்கொள்கை, விரிவான நிதிக்கொள்கை மற்றும் நடுநிலை நிதிக்கொள்கை என பிரிக்கப்படுவதுடன், இதன் உள்ளடக்கமாக அரசாங்க வருமானங்கள் மற்றும் செலவீனங்கள் காணப்படுகின்றன

***(02 புள்ளிகள்)***

***(மொத்தம் 20 புள்ளிகள்)***

*பகுதி C முற்றும்*

***Notice:***

These answers compiled and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of material for AAT students.
These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*